MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Among the Deities is Dukai-Dhurgaiyamman (Direct Field Study)

K. Srinivasan[1], Supervisor Dr. C. Markandan[2]

Doctoral Researcher[1], Assistant Professor[2], Vels Science Institute of Technology Higher Studies, Chennai, India

Manuscript ID :
MT127A0080

Volume : 2

Issue : 4

Month : December

Year : 2022

Received: 10.10.2022
Revised: 29.10.2022
Accepted: 16.11.2022
Published: 28.11.2022

Pages : 177-189

DOI:
10.5281/zenodo.7375220

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

ABSTRACT:

In the period of not knowing very well about human reproduction, women were considered as goddess of reproduction. As the same manner, in the period of agricultural development, the earth was considered to be the main source. Women and soil were both equally respectful women were being the superior in both birth and death. During those periods of motherhood society, she was worshipped as demon and also as goddess.

KEYWORDS:

Suladu, Meeting, Dispute, Reckoning, Boundary, Black Box

நாட்டுப்புறத் தெய்வங்களில் துக்காயி - துர்க்கையம்மன்

(நேரடி கள ஆய்வு)

க. சீனிவாசன்[1], நெறியாளர். முனைவர் செ. மார்கண்டன்[2],

முனைவர்பட்ட ஆய்வாளர்[1], உதவிப் பேராசிரியர்[2],

தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழிநுட்ப, உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மனித இனப்பெருக்கம் பற்றி சரியாகத் தெரியாத காலக்கட்டத்தில் பெண்கள் தெய்வமாக கருதப்பட்டனர். இனப்பெருக்கத்தின் தெய்வம் பெண், அதே போல விவசாயம் வளர்ச்சிப் பெற்ற காலத்தில் பூமி முக்கிய தாயாக கருதப்பட்டது. பெண்ணும், மண்ணும் சமமாக மதிக்கப்பட்டது. பெண்களே இறப்பு, பிறப்பு இரண்டிலும் உயர்ந்தவர்களாக போற்றப்பட்டது. தாய் சமூகத்தின் அந்த காலக்கட்டத்தில் பெண்களை பேயாகவும், தெய்வமாகவும் வணங்கி வழிப்பட்டனர் என்பதை இந்த கட்டுரை ஆராய்கிறது.

கருச்சொற்கள்

சூலாடு, சந்தியாடு, தகராறு, எல்லைக்கல், எல்லைச்சட்டி, கள்ளுப்பானை

முன்னுரை

சோழ நாடு சோறுடைத்து, பாண்டிய நாடு முத்துடைத்து, சேரநாடு வேழ முடைத்து, தொண்டைநாடு சான்றோர் உடைத்து என்று முன்னோர்களால் சொல்லப்பட்டு வந்தது தொண்டை நாடான நடுநாடு விழுப்புரம் மாவட்டம், தற்பொழுது கள்ளக்குறிச்சி மாவட்டமாக மலர்ந்துள்ளது, சங்கராபுரம் வட்டம், பாண்டலம் - 96 கிராமம் தேசப் பற்றும் மொழிப்பற்றும், தெய்வபக்தியும் நிறைந்த ஒரு கிராமம் சங்கராபுரம் வட்டாரத்தில் பாண்டலம் - 96 கிராமத்தில் வாழும் மக்கள் பழங்கால வழிபாட்டு முறைகளை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர். பாண்டலம் என்பது கோவில், நகரம் என்றும் சிறப்பாக அழைக்கப்படுகிறது. இதில் பழமையான நாட்டுப்புற தெய்வ வழிபாடுகளில் துக்காயி - துர்க்கையம்மன் பற்றிய தெய்வ பக்தியும் அதனை வழிபடும் பாண்டலம் - 96 மக்களின் இறை வழிபாட்டு முறைகளையும் இந்த ஆய்வு கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. மனித இனப் பெருக்கத்தைப் பற்றி அறியாமையில் இருந்த காலத்தில் பெண்தான் இனப் பெருக்கத்தின் தெய்வம் என்று கருதப்பட்டு முதன்மையாக்கப்பட்டாள். அதைப்போன்றே பயிர்த் தொழில் வளர்ச்சியடைந்த

காலத்தில் (பூமியே) கருப்பொருளாகக் கருதப்பட்டது. இதனால் பெண்ணையும் மண்ணையும் ஒன்றாக கருதினர்.

பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டிலும் பெண் முதன்மையானவளாக இருந்தாள். தாய்வழிக் குமுகமாக இருந்த தொடக்கக் காலங்களில் பெண்ணே வீரத் தெய்வமாகவும், பேயாகவும், தாயாகவும் வணங்கப்படும் நிலைக்குரியவளாய் இருந்தாள்.

அணங்கு, அரமகள், காத்து (காற்று) கருப்பு காட்டேரி, காளி, பூதம், தொல் பேய்த் தெய்வங்கள் பழந்தமிழர்களிடையே வழங்கின, "வீரத்தாய் தெய்வமாக கொற்றவை (காளி)" தெய்வம் எனப்பட்டாள்.

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள தெய்வங்கள்

மானுடம் தோன்றிய நாள் முதல் தனி மனிதனுக்குள், அச்சம், போராட்டம் நன்றியுணர்வு, இவற்றைக்காண அழிவில் தன்னைக் காத்துக் கொள்ள உருவாக்கிக் கொண்ட கடவுட் கொள்கை தமிழ்ச்சமுதாய அளவிலும் தோன்றி வளர்ந்து இன்றியமையாத தன்மையை பெருவதாயிற்று.

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்த யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப"[1]

என்ற தொல்காப்பியம் கருப்பொருட்களின் வரிசையில் முன்னதாக வைத்திருப்பது தெய்வத்தைத்தான் என்பது காண்கிறோம். பறவைகள், விலங்குகள், தாவரங்கள் போலவே அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்களையும் அவற்றிலிருந்து பிரிக்க இயலாதவாறு அமைத்துள்ளனர். நிலத்திற்கேற்ற தொழிலும் உணவும் இயற்கையாக அமைவது போலவே அந்நிலத்துத் தெய்வ வழிபாடும் இயல்பாக அமைந்துள்ளது இம்முறையில் தான்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"[2]

என்ற தெல்காப்பியம் திணைத் தெய்வங்களையும் வகுத்துக் கூறியது. முல்லை நிலத்திற்கு திருமாலும், குறிஞ்சி நிலத்திற்கு முருகனும், மருத நிலத்திற்கு வேந்தனும், நெய்தல் நிலத்திற்கு வருணனும், பாலை நிலத்திற்கு கொற்றவையும் திணை நிலத் தெய்வங்களாகும். "கொற்றவை நிலை" என்ற தொல்காப்பியர் சுட்டுவது பெண் தெய்வமான கொற்றவையே என்பது அறிய முடிகிறது.

தெய்வங்களுள் காளி என்ற தாய்த் தெய்வம் பிற தெய்வங்களை விட மிகுதியாக இலக்கியங்களில் குறிக்கப் பெற்ற கொற்றவையே பிற்காலத்தில் காளி என்று குறிக்கப்பெறும் கொற்றவை (காளி). பாலை நிலத்தில் அடிக்கடி வழிப்பறி கொள்ளை, கொலைகள் நடக்கும். அதனைத் தடுத்து மக்களை காக்கவே கொற்றவை (காளி) காவல் தெய்வமாக இருப்பதாக தெரிகிறது. போருக்கு செல்லும் போதும் வணங்கப்படும் தெய்வம் காளி. வெற்றியை மட்டும் தருபவள்.

துக்காயி - துர்க்கையம்மன்

சில இனக்குழு மக்களின் குலதெய்வம் துர்க்கை (துக்காயி) என்றும் அதனையே கொற்றவை எனச் சிலம்பு கூறுவதையும் அறியலாம்,

> **"இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி**
> **தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுத்து**
> **ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி"**[3]

என்று சிலப்பதிகார வேட்டுவரியில் சாலினி கண்ணகியைத் தெய்வமாகவே போற்றுகிறாள் அவள் உரைத்தது போல இன்று கண்ணகி பல ஊர்களில் மாரியம்மன், காளியம்மன், துர்க்கையம்மன் போன்ற பல பெயர்களில் போற்றப்படுகிறாள். அவளே தீயனவற்றை எதிர்த்து மக்களைக் காக்கும் துர்க்கையம்மனாக (துக்காயியாக) உணரப்படுகிறாள்.

துக்காயி - துர்க்கை அம்மன் வரலாறும் வழிபாடும்

கோயில் உருவாகக் காரணமான நிகழ்ச்சி தொண்டை மண்டலத்தில் ஒரு ஆட்சி பகுதியாக விளங்கிய பாண்டலம் - 96 என்ற இந்த ஊரில் மேற்கே பெரிய ஏரி ஒன்று உள்ளது இந்த ஏரியின் கிழக்கு பகுதியில் கோயில் அமைந்துள்ளது எல்லோரும் தெய்வமாக வணங்கி வந்தனர். துக்கங்களையும் துயரங்களையும் காக்கும் குல தெய்வமாகவும் வழிபட்டால் அப்போது அந்த கோயிலின் கிழக்கு முகமாக பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நிறைமாத கர்ப்பினிபோல் விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் அந்த ஊரு தெற்கே இருந்து வந்த (ஏழு திருடர்கள்) அந்த அம்மன் கோயிலுக்கு வந்து அன்று இரவு அந்த பகுதியில் திருடுவதற்கு முடிவு செய்து அம்மனிடம் வணங்கி வழிப்பட்டனர்.

பாண்டலம் - 96 கிராமத்தில் உள்ள வீடுகளிலும், வயல்வெளியில் விளைந்து நிற்கும் நெற்கதிர்களையும் கொள்ளைக் கொள்ள முடிவு செய்து அந்த ஏழு கள்வர்களும் களவாட செல்லும் முன் துக்காயிடம் அனுமதி வேண்டியும் அதற்கு காணிக்கை செலுத்துவது என்று அம்மனிடம் வேண்டுதல் வைத்தனர். அதில் ஒருவர் மட்டும்

வேண்டாம் இது சக்தி வாய்ந்த அம்மனாக உள்ளது என்று ஒருவர் மட்டும் தெளிவாக கூற மீதி ஆறுபேரும் மறுத்துவிட்டு அம்மனை வணங்கி எழுமுன்னே கண் தெரியாமல் போய்விட்டது. பின் அந்த ஆறு பேரும் எங்களை மண்ணித்துவிடு துக்காயி தாயே! நாங்கள் தவறு செய்து விட்டோம் என்று வேண்டி கண்ணீர் மல்க துக்காயியின் துணையை வேண்டி காணிக்கையாக இரவோடு இரவாக கல்தூண் ஊஞ்சல் வைத்த பின்பு அந்த துக்காயி அம்மன் அவர்களுக்கு கண்பார்வை வழங்கி மன்னித்து அருளியுள்ளாள். அதன் பிறகு ஊரை விட்டு சென்ற திருடர்கள் திரும்பவும் இந்த திருட்டு தொழிலை கைவிட்டு நல்ல மனிதர்களாக மாறி வாழத் தொடங்கினர். இது தான் இந்த பகுதியில் பெரும்பாலான மக்களின் கருத்தும் வாய்வழி செய்திகளாகவும் வரலாறாகவும் நேரடி கள ஆய்வில் செய்யப்பட்டது. துக்காயி அம்மனின் தூய்மையான வரலாறு பொய்யும், திருட்டையும் ஒரு போதும் அனுமதிக்காத அம்மனாக ஆட்சி செய்கிறாள் எல்லைத் தெய்வமாக காத்து வருகிறாள்.

காவல் தெய்வம் - துக்காயி அம்மன் - எல்லை

எல்லாம் கிராமத்தைப் போன்றே ஊரின் எல்லையிலிருந்து வேற்றூர்காரர் … எந்த தீங்கும் வந்து விடாமல் காக்கும் தெய்வம் ஒன்று இருக்கும் அந்த தெய்வத்தையே எல்லைக் காவல் தெய்வம் என்றும், எல்லைத் தெய்வம் என்றும் கூறுவர்.

பழைய விழுப்புரம் மாவட்டம் (தொண்டை மண்டலமாக விளங்கிய) நடு நாடு என்று பெயர்ப்பெற்றது. தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சங்கராபுரம் வட்டத்தில் 96 கிராமங்களை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டலம் - 96 என்று பெயர் பெற்ற ஊர் தற்பொழுது விழுப்புரம் மாவட்டத்தின் தெற்கு மேற்குப் பகுதிகளைக் கொண்டு தமிழ்நாட்டின் 34-வது மாவட்டமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் 8 சனவரி 2019 அன்று புதிதாக உருவாக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் தலைமையிடம் கள்ளக்குறிச்சி நகரம் ஆகும்.

இப்புதிய மாவட்டதை 26 நவம்பர் 2019 அன்று தமிழக முதல்வர் எடப்பாடி அறிவித்தார்.

பாண்டலம் ஊராட்சிகளாக விளங்கிய பின் 1992க்குப் பிறகு தேவபாண்டலம் அ. பாண்டலம் என நிறுவாகத்திற்காக தேவ பாண்டலம் அக்கரகார பாண்டலம் (இராஜபாண்டலம் - கிடங்கன் பாண்டலம் என பிரிக்கப்பட்டது.)

தேவபாண்டலம் - அ. பாண்டலம், தமிழ் நாட்டின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் வட்டாரத்தில் அமைந்துள்ளது இந்த ஊராட்சி சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கும், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றிலிருந்து 9 ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

2011 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை 5227 ஆகும். இவர்களில் பெண்கள் 2568, ஆண்கள் 2659 பேரும் உள்ளனர்.

அ. பண்டலம் 7 ஊராட்சி மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

2011 ஆம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்தம் மக்கள் தொகை 2517 ஆகும். இவர்களில் பெண்கள் 1264, ஆண்கள் 1253.

கோவில் அமைவிடமும் தெய்வ உருவ அமைப்பும்

பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வம், கோயில்கள் பீடங்களாகும், பீடங்களே கோயில்களாகக் கருதப்படுகின்றன. கோயில் பீடங்கள் மண்ணாலும், கல்லாலும் சிமெண்டாலும் அமைந்திருக்கும். விழாக் காலங்களில் மட்டும் பந்தல் போட்டு தோரணங்கள் கட்டுவர், பத்தாண்டுகளுக்கு முன்னாடி துக்காயிக்கு கல்லாளான மண்டபம் கட்டியிருந்தனர். ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்த கல்மண்டபம் தான்.

இந்த கோயில்கள் அதில் உறையும் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன, துக்காயி தற்பொழுது துர்க்கையம்மனாக மேலாதிக்கம் பெற்றவளாக மாறியுள்ளாள்.

சில நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு ஆகமவிதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த துக்காயி - துர்க்கை அம்மன் கோபுரம், கருவறை முன் மண்படம், கொடிகம்பம், சுற்றுச் சுவர்கள் கோபுரம் - பலிபீடம், ஊஞ்சல் செட்டும் அமைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வங்கள் நீர்நிலைக்கருகில் இருக்கும். மக்களின் வாழ்வில் நீர் முக்கிய பங்கு வகிப்பதால் நீர் நிலை அருகிலேயே தெய்வத்தை வைத்து வணங்கினார்.

துக்காயி - துர்க்கையம்மன்

ஊரில் வரும் தீயசக்திகளைத் தடுத்து அவைகளுடன் சண்டையிட்டு அவர்களை அழித்தும் ஊருக்கும் மக்களுக்கும் எந்த விதமான தீங்கும் ஏற்படாமல் பாதுகாத்தும் ஊரின் வெளியில் காவல் தெய்வங்களாகக் காணப்படுகின்றாள். பாண்டலம் - 96க்கும் எல்லைக் காவல் தெய்வமாக துக்காயி ஊரின் வெளியே மக்கள் செல்லும் பொழுது அவர்களைக் காப்பதாகவும் செய்யுத் தொழில் தடையில்லாமல் நடைபெறவும் இத்தெய்வங்களை வழிபடுகின்றனர்.

கோவில் அமைவிடம்

நமது முன்னோர்கள் இயற்கையை தெய்வமெனக் கருதி வழிப்பட்டார்கள் என்பது அனைவரும் அறிந்தது. தெய்வமானது எங்கும் நிறைந்துள்ளது என்பது சான்றோர்

கருத்து தமிழ் மக்களாகிய நாம் வணங்கும் தெய்வங்களை ஒரு குறிப்பிட்ட நிலையில் இல்லாமல் வணங்கவும் முடியாது.

இதன் அடிப்படையிலேயே தாம் செய்யும் தொழில் அல்லது வயல்களின் அருகில் அடையாளச் சின்னங்களை அமைத்தார்கள். அவைகளே வழிபடும் கோயிலாகும், இந்த துக்காயி - துர்க்கையம்மன் கோயிலும் ஊரின் மேற்கே பெரிய ஏரிக்கரை உள்ளது அதில் கிழக்கு கரை ஓரம் மதகிற்கு இடது பக்கம் வயல்கள் நிறைந்த பகுதியின் மத்தியிலும், தொம்ப மதுகு வலது பக்கமும் அமைந்துள்ளது. இந்த துக்களாயிக்கு துணை தெய்வமாக உத்தண்டராயன், முனியப்பன், மதகடியான், அய்யனாரப்பன், பெரியாயி மேற்கே, கன்னிமார், தடிகாரன், உத்தண்டராயன் இராஜ முனியப்பன் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்கள் அமைந்துள்ளன. இதில் இன்று துக்காயி ஆதியில் இருந்த இயற்கை வழிபாடு உருவ வழிபாடானது பின்பு மாற்றம் பெற்று வழிபாடு இயற்கைச் சூழலில் நடைபெறுகிறது.

ஒரு தெய்வம் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு குறிப்பிட்ட வழிப்பாட்டைப் பெறும். அதே தெய்வம் பிரிதொரு இடத்தில் பிரிதொரு இனக்குழுவால் குலதெய்வமாவும் வழிப்படப்படலாம். குலதெய்வம் பிரிதொரு சூழலில் ஊர்தெய்வங்களாகவும் வழிபடலாம்.

துக்காயி அம்மனை வணங்க தீர்மானித்தல்

பாண்டலம் - 96 என்ற தேவபாண்டலம் அக்கரகார பாண்டலம், இராஜ பாண்டலம் கிடங்கன் பாண்டலம் சாதிக்கு இருவரும் (அதற்கு மேலும்) அழைத்து ஒரு மாதத்திற்கு முன்பே அறங்காவலர் குழு நாட்டாரின் தலைமையில் கூட்டம் நடத்தி, பொருள் செலவு, உற்சவம் விழா ஏற்பாடும், பாதுகாப்பு, தேர் புனரமைப்பு கோயில் வண்ணம் தீட்டுதல் யார் சாத்து கட்டுவது, உண்டு கட்டுவது போன்றவைகளை தீர்மானித்து (இதில் ஆதி திராவிடர்களை தவிர்த்து) நடைபெறும்.

விழாவிற்கு வரி போடுதல்

ஒவ்வொரு முறையும் திருவிழா ஏற்பாடு செய்யும் போது அப்போதுள்ள விலை வாசியை கொண்டு வரிப்போடுவார்கள். இந்த ஆண்டு 35 ஆண்டுகளுக்கு பிறகு 2022 ல் (6.9.2022 முதல் 16.9.2022 வரை) வரிப்போடுதல் ஒரு வீட்டிற்கு 1 வரி குடும்பத்திற்கு ஒரு வரி - 1000 ரூபாய், காணி வரி - 1000 ரூபாய், ஏரி குத்தகைப் பணம் மற்றும் நன்கொடைகள் மூலம் திருவிழா ஏற்பாடுகள் நடைபெறும்.

தேர் தயார்படுத்தல்

இந்த தேர் 500 ஆண்டுகளை கடந்தது குறிப்பாக பார்த்தசாரதி பெருமாள் கோயில் தேர் இதனை துக்காயிக்கு பயன்படுத்துகின்றனர். தற்போது சக்கரங்கள் மாற்றி தேர்சரி செய்து திருவிழாவிற்கு தயார் நிலையில் வைத்தனர். இதில் பல தலைமுறையாக ஆச்சாரி (தச்சர்) சமூகத்தினர் பங்கெடுத்து 1 மாத காலத்தில் தேரை சிறப்பாக வடிவமைப்பர்.

சாத்துக் கட்டுதல்

மீனவர்கள் (பருவத ராஜ குலத்தார்) ஆதிதிராவிடர்கள் பெரியக் கொத்து, நடுக் கொத்து, சின்னக் கொத்து என்று உள்ளனர். இவர்கள் இரு சமூகத்திலும் ஒருவர் உண்டு கட்டி என்றால் இன்னொருவர் சாத்துக் கட்டி இவர்களுக்கு சமைத்து போடுவதற்கு கைம்பெண் ஒருவர், கூட தண்டோராகிகாரன் ஒருவன் (முதலியார் சமூகம்) ஒரு காலத்தில் குதிரைக் காரன் உண்டுக்கட்டி, சாத்துகட்டி மேளாக்காரன் என்று இருந்தனர்.

சாத்துக்கட்டுதல் உண்டு கட்டுதல்

சாத்துக்கட்டுதலும் உண்டு கட்டுதலும் ஒரு குறிப்பிட்ட இரண்டு சமூக மக்கள் மட்டுமே பாத்தியப் பட்டவர்கள். ஒன்று ஆதிதிராவிடர் வகுப்பில் தோட்டி வகையறாவில் பெரியக் கொத்து நடுகொத்து சின்னக் கொத்து என்று உள்ளனர்.

தனி இடம்

உண்டுக்கட்டிக்கும், சாத்துக்கட்டிக்கும், மேளக்காரர் (தண்டோரக்காரன்) இவர்கள் மூன்று பேரும் சிவன்கோயில் வெளி மண்டபத்தில் யாரும் பார்க்காத வண்ணம் தங்கி இருப்பர்.

இவர்கள் மூவரும் பூசாரியும் இந்த பூசணி மண் உடையார் பூசாரிக் கொண்டு நடைபெறும் சேர்ந்து மாலை மசங்கும் நேரத்தில் காலையில் யாரும் பார்க்காத போது இந்திரக் கல்லுக்கு ஊர் எல்லை முழுவதற்கும் சென்று பூசை செய்து வருவார்கள் கோயிலில் வந்து விரதம் இருந்து உண்பார்கள் இப்படியே திருவிழா முடியும் வரை இருப்பார்கள்.

சாத்துகட்டுதல் உண்டு கட்டுதல்

உள்காப்பு கட்டிய உடன் சாத்துக்காரன் (சாத்துக்காரச்சி) உண்டு கட்டி (உண்டுக்கட்டிச்சி) இவர்களுக்கு மொட்டை அடித்து குளித்து முழுகி, குங்கும நிற சேலையை அம்மன் போல கட்டிக் கொண்டு கையில் அறுவாலும் கொடுவாலும்

வைத்திருப்பர். அவர்களுக்கு இரண்டாவதாக காப்பு கட்டி அன்று முதல் தனிமையில் இருப்பார்கள்.

துக்காயி அம்மன் குதிரை

குதிரைக்காரன் இருவரும் (ஆதிதிராவிடர்கள்) துக்காயி கோயிலுக்கு சொந்தமான குதிரை இருக்கும். இதனை மேய்ப்பது பின் மாலை நேரத்தில் எங்குள்ளதோ எங்கு வேண்டுமானாலும் மேயும் அதனை தொட்டு வணங்குவார்கள் அங்கு தேடிச்சென்று அழைத்து வந்து அருகில் குதிரைப்பட்டியில் அடைக்க வேண்டும். இவருக்கு ஊரில் உள்ளவர்களின் இல்ல நிகழ்வில் கொடுக்கப்படும் (வருமானம்) வருமுடி மட்டும் தான். ஊதியமாக கொடுப்பார்கள். (நெல், உணவு, காசு பணம்)

சாத்துக்கட்டி- சாத்துக்காரச்சி

இவர்கள் ஆதி திராவிடர் இனக்குழு (தோட்டி வகையறாவை) சார்ந்தவர்கள் (மிராசுக்காரர் என்பர்) இவர்களுக்கும் வயலில் அறுவடை நேரங்களில் நெல் மணிகள் கொள்முதல் நல்லது கெட்டது வருமுடி மட்டும் தான் வேறு எந்த பணபலனும் சொற்ப ஊதியம் இல்லை. (உண்டுக்கட்டி, சாத்துக்கட்டி)

நிபந்தனைகள் மூலம் சாத்துக்கட்டுதல் (இந்த ஆண்டு, 6-9-2022)

மீனவர்களுக்கு சொந்தமான ஏரிகள், குளங்கள் அனைத்தும் சொந்தம் அதில் மீன் பிடித்து தங்கள் சமூக முழுவதற்கும் பங்கு கொடுப்பார்கள் பொருளாதாரம் பெருகும் இது காலங்காலமாக நடைபெற்றது.

35 ஆண்டுகளுக்கு பிறகு சாத்து கட்டியும் உண்டு கட்டியும் ஒரு நிபந்தனையின் பேரில், கட்டியுள்ளார் சாத்துக்கட்டி (ஆதிதிராவிடர்) 1 ஏக்கர் நிலம், 5000 பணம் அடுத்தமுறை திருவிழா நடத்தும் வரையும் பயன்படத்தி கொள்ளலாம், இதனை பிறகு ஒப்படைக்க வேண்டும் என்று நிபந்தனையின் பேரில் உண்டுக்கட்டி - மீனவர்கள் (பருவத இராஜ குலம்) சார்ந்தவர்கள் எங்கள் சமூகத்திற்கு மீண்டும் மீன் பிடிக்கும் உரிமை வேண்டும் என்று நிபந்தனையின் பேரில் இந்தாண்டு உண்டுக்கட்டி சாத்துக்கட்டி அம்மனுக்காக வந்துள்ளனர் ஊர் பெரியோரின் வேண்டுகோலுக்கிணங்க.

திருவிழா தேதி தீர்மானித்தல்

ஊர்க்கூடி நாட்டாமை வைத்து அறங்காவலர் குழுவும் சாதிக்குழு தலைவர்களும் ஊர் முக்கியமானவர்களும் கலந்து ஆலோசித்து தேதி தீர்மானிப்பர். பிறகு ஊர்த்தோட்டியை அழைத்து தண்டோராப் போட சொல்வார்கள் "கோயில்ல சாமி கும்பிட போறாங்க அதனால அனைவரும் சுத்தம் பத்தமாக வீடுவாசல் முழுகி, கோலம் போட்டு

விளக்கேற்றி பக்தியோடு இருக்கனும் வயதுக்கு வந்த பசங்க வீட்டுக்கு தூரம் ஆனவங்க, நிறை மாத கர்ப்பினிகள் கணவன் மனைவி தலைப்பு மாத்தி படுக்கனும். நாளை முதல் உள்காப்பு கட்டண பிறகு வெளியூருக்கு போவதும், வெளியூரிலிருந்து வருவதோ எல்லைத் தாண்டக் கூடாது என்று தோட்டி தண்டோரா அடிப்பர்.

உள்காப்பு கட்டுதல் (சக்தி அழைப்பு)

தேவபாண்டலம் எல்லையில் உள்ள நாட்டார் வீட்டிலிருந்து அவர்கள் அருகில் கங்கையம்மன் கிணறு இருந்த இடத்தில் பூசை சாமான்கள் அனைத்தும் படைக்கப்பட்டு அங்கிருந்து துக்காயி கோயிலுக்கு எடுத்துச் சென்று அம்மனிடம் படைத்து பின்பு அங்கிருந்து (S.V பாளையம்) சௌந்திர வள்ளிப் பாளையம் என்ற ஊரின் எல்லையில் அணை மேட்டில் பாறையில் (துர்க்கை அம்மன் புடைப்புச் சிற்பம் பாறையில் உள்ளன இன்று சிதளமடைந்து உள்ளது) அங்கு சென்று பச்சைப் பரப்பி சக்தி அழைப்பு நடத்தி அம்மன் வந்து ஆடுவாள் அம்மனிடம் அருள்வாக்கு பெற்றப் பிறகு ஆற்றிலிருந்து கோயிலுக்கு வந்து, துக்காயி அம்மனுக்கு முதல் காப்பு பரிகார தெய்வங்களுக்கு காப்பு கோயிலை சுற்றியுள்ள எல்லைகளுக்கு மூன்றாவது காப்பு சாத்துக் கட்டிக்கும் உண்டு கட்டிக்கும் இரண்டாவது காப்பு ஊர் சந்தியில் இருக்கும் சந்திக் கல்லுக்கு காப்பு கட்டுதல்.

வெளிக்காப்பு கட்டுதல்

9.9.2022 அன்று மாலை 3.00 மணி அளவில் சக்தி அழைக்க பாண்டலத்து எல்லையான அணை மோட்டிற்கு சென்று S.V பாளையம் பூஜை சாமான்கள் அனைத்தும் எடுத்துக் கொண்டு துக்காயி குதிரையை அழைத்துச் சென்று அங்குள்ள துக்காயி அம்மனுக்கு பச்சை பரப்பி, பூசைகள் செய்து அம்மனை வரவழைத்து மருள் வந்தவுடன் அனைவரும் திருவிழாவில் குறைகள் ஏதாவது உள்ளதா என்று கேட்பார்கள், இல்லை சிறப்பாக உள்ளது என்றதும் அப்பொழுது கோயில் பூசாரி (அய்யர்) காப்பு கட்டுவார் சாத்துக்காரருக்கும், உண்டுகட்டிக்கும் காப்பு கட்டுவார்கள், எல்லைச் சட்டி உடைப்பவருக்கு காப்பு கட்டுவார், பிறகு அனைத்தும், கரகம் அம்மன் குதிரை மீது வைத்து 5 கி,மீ தூரத்திற்கு அழைத்துக் கொண்டு துக்காயி கோயிலை அடைவார்கள். பின்பு மற்றவர்களுக்கு கோயிலில் தான் காப்பு கட்டுவார்கள். (குறிப்பாக ஆண்கள் காப்புக் கட்டுவார்கள் திருவிழாவில் பங்கெடுப்பவர்கள் மட்டும்).

அய்யனார் பொங்கல்

பாண்டலம் - 96லிருந்தும் அனைவரும் அய்யனாருக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்வார்கள். இந்த பொங்கல் துக்காயி தங்கையாகவும் அய்யனாரப்பன் அண்ணனாகவும் சொல்லப்படுகிறது. அண்ணனுக்கு முதல் நாள் படையல் வழிபாடு,

தங்கை துக்காயிக்கு அடுத்தநாள் பொங்கல் (ஒருவரிடம் துக்காயிக்கு தானே திருவிழா ஆனால் அய்யனாருக்கு எதுக்கு பொங்கல் என்று கேட்டதற்கு அண்ணனை பட்டினி போட்டு தங்கை எப்படி சாப்பிடுவாள்) வழிபாட்டிலும் அண்ணன் தங்கை பாசம் சமத்துவம் காணப்படுகிறது. (இதிலும் ஆதிதிராவிடர்கள் நீங்களாக)

துக்காயிக்கு பொங்கல்

அண்ணன் அய்யனாரப்பனுக்கு பொங்கல் வைத்து முதல் நாள் வணங்கிய பிறகு அடுத்த நாள் தங்கை துக்காயி துர்க்கையம்மனுக்கும் அனைத்து சமூகத்தினரும் குறிப்பாக பிறந்த பெண்கள் பொங்கல் வைப்பார்கள் வைத்து துக்காயி அம்மனுக்கு படைத்து விட்டு மாலை வேலையில் வீடு திரும்புவார்கள் இரவு அம்மன் வீதியுலா நடைபெறும்.

வழிபாடும் - படையலும்

துக்காயி துர்க்கையம்மனுக்கு 35 ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டலம் - 96 மக்கள் அனைவரும் முப்பூசை செய்து வந்தனர் (அப்பொழுது பூசாரியாக வன்னியர் சமூகத்தைச் சார்ந்தவரும் மீனவர் சமூகத்தைச் சார்ந்தவரும் இருந்தனர்). ஆனால் கோவில் மேல்நிலைப் பெற்று பிராமணர் கோவிலுக்குள் அர்ச்சகராக வந்தவுடன் துக்காயி அம்மனுக்கு துர்க்கையம்மன் என்று பெயர்ச்சூட்டி வெண்பொங்கல் சைவ படையலிட்டு வழிபாடுகள் நடைபெற தொடங்கிவிட்டனர் துக்காயி அம்மனுக்கு பொங்கல் முடிந்த அடுத்த நாள் காலையில் 5 மணிக்கு அபிசேகம் ஆராதனை தொடங்கி ஆறு மணிக்குள் பூசை முடிந்து அதன் தொடர்ச்சியாக அம்மன் வழிபாடு நடைபெறும்.

பலியிடுதல்

துக்காயி அம்மன் முன்னொரு காலத்தில் பலியாக கர்ப்பிணி பெண்ணை கேட்டதாகவும் அன்று முதல் பெண்ணிற்கு பதிலாக பெண் கர்ப்பமான ஆட்டினை பலியிடும் வழக்கம் இருந்து வருகிறது. இந்த ஆட்டிற்கு சூலாடு குத்துதல் என்று பெயர். பூசை முடிந்து அதிகாலை பலிப்பீடத்திற்கு வெளியே சூலாட்டினை சாத்துக்கட்டி அம்மனின் கையில் உள்ள திரிசூலத்தினால் வயிற்றில் குத்தி உதிரம் வெளிவரும் அப்போது ஆட்டினை தலையை வெட்டி அம்மனுக்கு பலிக் கொடுப்பார் உண்டுக் கட்டி அதனை தொடர்ந்து ஊர் எல்லைகளில் உள்ள சந்திக்கல்லுக்கு சந்தி கிடாய் வெட்டுவார்கள்.

எல்லைச் சட்டி

அம்மனுக்கு சூலாடு பலிக்கொடுத்து அதிலிருந்து இரத்தத்தை பிடித்து எல்லைச் சட்டியில் சேகரிப்பர். பிறகு சந்திக்கல்லுக்கு சந்தி கிடாய் வெட்டிப்பலியிடும் போது

அனைத்து ஆட்டிலிருந்தும் உதிரம் சேகரித்து எல்லைச் சட்டியில் பிடித்து வைத்துக் கொள்வார்கள். அங்கு பலிக்கொடுக்கும் ஆடுகள் அனைத்தும் திருவிழாவில் பங்கு கொள்ளும் அனைத்து சமூகத்திற்கும் தொழிலாளிகளுக்கும் வழங்கப்படும். கீழே உள்ளப் பட்டியலின் படி

வரிசை எண்	சந்திக்கல் விபரம்	தொழிலாளர்/ வகையறா
1	துர்க்கையம்மன் கோயில்	சூலாடு - மீனவர்கள்
2	உத்தண்டராயர் கோயில்	நாச்சான் வகையறா
3	அய்யனார் கோயில்	நாட்டார் வகையறா
4	மாமாந்தூரா கொல்லை	நாவிதர் வகையறா
5	பெண்கள் விடுதி மூலை	செங்குந்தர்
6	பிள்ளையார் கோயில் (நட்டுவனார்)	கோனார்
7	தச்சன் வீட்டு கல்லு	வன்னியர்
8	சேலத்தான் கணபதி வீட்டு மூலை	நாய்க்கர்
9	மேல்நிலைப் பள்ளி எதிரில் (அங்குவண்ணார் மூலை)	தோட்டி அ. பாண்டலம்
10	மணியக்காரர் வீட்டு மூலை	ஆசாரிகள் அ. பாண்டலம்
11	அக்ராவரத்தார் சந்து	தோட்டி தேவபாண்டலம்
12	கணபதி தெரு மூலை	ஆசாரிகள் தேவபாண்டலம்
13	நாட்டார் வீட்டு எதிரில்	பூசாரிகள் மீனவர்கள்
14	மசூதி எதிரில்	பூசாரிகள் மீனவர்கள்
15	கால்பாய் வீடு அருகில்	வண்ணார் அ.தே. பாண்டலம்
16	தஸ்தகீர் வீட்டு மூலை	மண்ணு உடையார்
17	தேர் முட்டி	ஒட்டர்
18	தேர்கெடா	ஆசாரிகள் (1/2+1/2)

எல்லைச் சட்டி தேரில் கட்டுதல்

பலியில் சேகரித்த உதிரத்தை அம்மனுக்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் முன்னாடி கட்டி தொங்கவிடுவர். அதனை இராகு காலம் எமகண்டத்தில் எல்லைச்சட்டியை காலை 11.30 மணிக்கு மேல் 12 மணிக்குள் ஊர் எல்லையான வட சிறுவள்ளூர் பாதையில் உள்ள எல்லைக் கல்லில் ஊரே சென்று சாத்துக்காரர் உண்டுக்கட்டி மேளக்காரர், எல்லைச் சட்டி எடுப்பவர் அனைவரும் சென்று எல்லை கட்டியை உடைத்துவிட்டு யாரும் திரும்பி பார்க்காமல் வருவார்கள் கொஞ்சம் தூரம் வந்தவுடன் இந்த நான்கு பேரும் குளித்து புத்தாடை அணிந்து பூசையையும் வேண்டுதலையும் முடித்துக் கொள்வார்கள். அங்கிருந்து நேராக வந்து தேர் வடம்

பிடித்து இழுப்பார்கள். அன்று பெரும் தேர்ந்திருவிழாவாக இருக்கும் அனைத்து சமூக மக்களும் கலந்துக்கொள்வார்கள் குறிப்பாக இசுலாமிய மக்களும் தேர்திருவிழாவில் கலந்து ரசிப்பார்கள் ஊரெங்கும் மகிழ்ச்சி பொங்கும் ஆனால் (ஆதிதிராவிடர் மக்கள் பெரும்பாண்மையாக கலந்துக் கொள்வது இல்லை அவர்களுக்கு எந்த முறைமையும் இல்லை அதை அவர்கள் பெரிதாக பொருட்படுத்தவும் இல்லை).

மஞ்சள் நீராட்டு விழா

அம்மனுக்கு திருவிழா முடிந்து அம்மனை குளிர்விப்பதாக கருதி அனைத்து பக்தர்களின் வீடுகளில் மஞ்சள் வேப்பிலை கலந்த மஞ்சள் நீரை அம்மன் வீதியுலா வரும் பொழுது அம்மனுக்கு படைத்து அதை முறைப் பெண்கள் முறை மாமன்கள் வயது வித்தியாசம் இல்லாமல் ஊற்றுவார்கள் (இது மேண்மையடைந்து பல வண்ணத் தூளை பூசிக்கொள்வது நீலத்தை ஊற்றி கொள்வது மஞ்சள் நீராட்டு விழாவின் உண்மை தன்மையை அறியாமல் நாகரீக மோகத்தில் மாற்றமடைந்து வருகிறது) அம்மனையும் அம்மனை வழிபட தொடர்ந்து உழைத்தவர்களின் உடல் வெப்பநிலைக் கூடியிருக்கும். நோய்த் தொற்றுகளிலிருந்து காத்துக் கொள்ளவும் மஞ்சள் நீராட்டு விழா நடத்துவது நம் பண்பாடு, கலாச்சாரம். ஒவ்வொரு தமிழர் நிகழ்விலும் மஞ்சள் ஆரத்தி தான் இறுதி நிகழ்வாக அமையும்.

முடிவுரை

ஊரின் எல்லைக் காக்கும் தெய்வமாக வணங்கப்படுபவள் துன்பங்களை போக்கும் துக்காயி அம்மனின் வரலாற்றையும் வழிபாட்டையும் வணங்கும் மக்களின் பண்பாட்டையும் இந்த மக்களின் வழிபாடுகள் மூலம் அவர்களின் சகோதரத்துவம் அனைத்தும் உறவுகள் கூடுவதையும் மேம்படுவதையும் இந்த துர்க்கையம்மன் கோவில் திருவிழாவில் காண்கிறோம். இந்த துக்காயி திருவிழா தனிமனித சுத்தம் ஒழுக்கம் பேணக்கூடியதால் இது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இருந்தது நீண்ட இடைவெளியாக 35 ஆண்டுகள் கழித்து 6.9.2022 முதல் 16.9.2022 வரை நடைப்பெற்றது இந்த ஆண்டு ஊரில் 3 திருவிழா பார்த்தவர்கள் மிகக் குறைவு. ஆகையால் தமிழர்களின் சமய மரபுகள் காக்க வேண்டும்! வழிபாட்டு முறைகள் மீட்க வேண்டும்! ஆண்டு தோறும் அம்மனை வழிபட வேண்டும்.!

முக்கியத் தகவலாளர்கள்

இரா. அண்ணாமலை, பூண்டுக்கார நாயுடு, டாக்டர். சந்தானலட்சுமி ரவி குருக்கள் கோவில் அர்ச்சகர்

துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம் அகத்திணை, பாடல் - 30
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல்-5
3. சிலப்பதிகாரம், வெட்டுவாவரி 12 : 47-50

REFERENCES

1. Tholkappiyam Agathinai, padal - 30
2. Tholkappiyam porulathigaram, padal-5
3. Silappathikaram, Vettuvavari 12 : 47-50

LIST OF INFORMANT

Informant Name	Age	Down	Date of Interview
M.Veembai	64	Devapandalam	6.9.2022
R. Muniyammal	51	Devapandalam	6.9.2022
B. Mallika	72	A. pandalam	6.9.2022
B. Alamelu	68	Raja pandalam	9.9.2022
B. Veeramani	48	Devapandalam	9.9.2022
B. Natarajan	62	A. pandalam	12.9.2022
R. Annamalai	66	A. pandalam	12.9.2022
Dr.D. Santanalakshmi	48	Devapandalam	10.9.2022
NSR Senthil Kumar	58	Devapandalam	10.9.2022
N. Arumugam	66	Devapandalam	10.9.2022
Muruku Kumar	38	A. pandalam	9.9.2022
Munusamy	65	Devapandalam	13.9.2022
Pavadai	82	Kidangan Pandalam	13.9.2022
Maragadham	71	Kidangan Pandalam	13.9.2022